[11th March 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : About Rs. 6,50,000 has been allotted for the improvement of the Nagercoil Headquarters Hospital. Instead of having a separate hospital for women in a different place, it is proposed to build wards for the women's section at the headquarters hospital.

SRI T. S. RAMASWAMY PILLAI : ஸார், இதற்கான எஸ்டிமேட்டுகள் தயாராகிவிட்டதா ? அதை அரசாங்கம் அப்ரூவ் செய்து விட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதுபற்றிய பூரா எஸ்டிமேட்டும் இன்னும் தயாராகவில்லை.

Opening of New Hospitals

* 635 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) புது ஆஸ்பத்திரிகள் திறப்பது சம்பந்தமாக சர்க்காரிடம் எவையேனும் திட்டங்கள் உண்டா ?

(ஆ) முதல், இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களில் அதில் எவை எவை நிறைவேற்றப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) An Infectious Diseases Hospital of 50 beds has been established at Madurai and 90 Primary Health Centres at various places in the State.

The number of Primary Health Centres now is more than 90 It is 96 now.

SRI N. R. THIAGARAJAN : திட்டங்களிட்டு ஜனத்தொகையை அனுசரித்து ஆஸ்பத்திரிகளை அமைப்பது என்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அந்த முறையில் பார்த்தால் எங்கள் ஜில்லாவில் தலைநகரில் தான் மேலும் மேலும் ஆஸ்பத்திரிகள் பெருகிகொண்டே வருகின்றன. இதை பரவலாக்குவதற்கு ஏதாவது ஒரு முறை அமல் செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பெரிய நகரத்தில் அதிகமாக ஆஸ்பத்திரிகள் வேண்டியிருக்கிறது. மதுரை பெரிய நகரம் என்று நாங்கள் கருதுகிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் எவ்விதம் கருதுகின்றார்கள் என்று தெரியவில்லை. ஆஸ்பத்திரிகளை பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் 70 ஆயிரம் அல்லது 80 ஆயிரம் பேர்கள் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு இடத்திலும் பிரைமரி ஸெண்டர் ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு, இப்போது சுமார் 90 செண்டர்கள் வரை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

Births and Deaths

* 642 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே 1958-ம் ஆண்டு எத்தனை பேர்கள் பிறந்தார்கள் ?

(ஆ) எத்தனை பேர்கள் இறந்தார்கள் ?

(இ) இவர்களுள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள், எத்தனை பேர் ?